அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கை இல. 59/89(1)

அரசாங்க நிருவாக, மாகாண சபைகள்
உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு,
சுதந்திரச் சதுக்கம்– கொழும்பு. 7
1990 ஜனவரி 26 ஆந் திகதி.

அமைச்சுக்களின் செயலாளர்கள்,
மாகாண சபைகளின் பிரதான செயலாளர்கள்,
திணைக்களங்களின் தலைவர்கள்,
கூட்டுத்தாபனங்களின் தலைவர்கள் அனைவருக்கும்.

பயங்கரவாத நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு
நட்ட ஈட்டுக் கோரிக்கைகள்

89.11.30ஆந் திகதியிட்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைக்கும் அதனுடன் தொடர்புடைய சுற்றறிக்கைகளுக்கும் தங்களுடைய கவனம் கோரப்படுகின்றது. பயங்கரவாத நடவடிக்கை காரணமாக கொல்லப்பட்டார்கள் என்ற அடிப்படையில் இறந்த பயங்கரவாதிகளின் தொடர்பிலும் நட்ட ஈட்டிற்கான கோரிக்கைகள் செய்யப்பட்டுள்ளதாகச் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

02. எனவே, பயங்கரவாத நடவடிக்கை காரணமாக ஏற்பட்ட இறப்புகள் அல்லது ஊறுபாடுகளுக்கு நட்டஈடு பெறுவதற்காக செய்யப்படும் கோரிக்கைகளைப் பரிசீலனை செய்யும்போது பயங்கரவாதிகளுக்கு அல்லது அவர்களில் சார்ந்திருப்போர்களுக்கு நட்டஈடு கொடுப்பதைத் தவிர்த்துக் கொள்வதில் கவனம் செலுத்தப்படவேண்டுமென அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

ஒப்பம்: பி. என். எம். பெர்னாந்து.
செயலாளர்,
அரசாங்க நிருவாக, மாகாண சபைகள்,
உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு.